PUBLIC LIBRARY
JAFFNA

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆனி 29 சனிக்கிழமை (13-07-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 147

# குடாநாட்டுக்கு தெற்கு இளைஞர்கள் ஆயுத பயிற்சியுடன் சிவில் பணிக்கு!

## சமாதான செயலணியாக இயங்க பத்தாயிரம் பேர் சேர்க்கப்படுவராம்

கொழும்பு, ஜூலை 13

யாழ்ப்பாணத்தில் சிவில் மற்றும் புனர்நிர்மாணப் பணிகளைச் செய்வதற்காக—

தென்னிலங்கையில் இருந்து பத்தாயிரம் இளைஞர்களைத் திரட்டி, ஆயுதப் பயிற்சி வழங்கி—

குடாநாட்டுக்கு அனுப்பி வைக்கும் புதிய திட்டம் ஒன்றை அரசாங்கம் நேற்று வெளியிட்டது:

யாழ்ப்பாணத்தில் இராணுவம் இப்போது சிவில் பணிகளையும் செய்து வருகிறது அவற்றிலிருந்து இராணுவத்தை விடுவிப்பதற்காக சமூர்த்தி சமாதான செயலணி ஒன்று உருவாக்கப்பட உள்ளது அந்தச் செயலணிக்கே பத்தாயிரம் தெற்கு இளைஞர்கள் திரட்டப்படவுள்ளனர்— என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த பத்திரிகையாளர் மாநாட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 50க்கும் மேற்பட்ட தமிழர் கைது

கொழும்பு, ஜூலை 13

கொட்டாஞ்சேனை, முகத்துவாரம் பகுதிகளில் படையினர் நடத்திய தேடுதலில் 50க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் 100க்கு மேற்பட்ட வீடுகளையும் படையினர் சோதனை செய்தனர். (இ-3)

## லங்கா கல்யாணி பருத்தித்துறை வருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 13

காங்கேசன் துறையில் தரித்துள்ள ''லங்கா கல்யாணி'' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தில் நாளை முதல் பொருள் இறக்கும் பணியில் ஈடுபடவிருக்கிறது.

காங்கேசன்துறையில் தற்சமயம் மூன்று கப்பல்கள் தரித்துள்ளன. ஓரேசமயத்தில் ஒரு கப்பலில் இருந்து மட்டும் பொருள்களை இறக்கும் வசதியே காங்கேசன்துறை துறைமுகத்தில் உள்ளது.

இதையடுத்து 'லங்கா கல்யாணி' கப்பலில் வந்த பொருள்களை பருத்தித்துறையில் இறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ- 3)

## பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

வவுனியாவில் உள்ள வடமாகாண இணைப்பு பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களின் பகிஷ்கரிப்பு தொடர்கிறது.

வடமாகாண இணைப்பு பல்கலைக்கழக கல்லூரியை யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைக்க வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-15)

## 11 படையினருக்கு விளக்க மறியல்

மாத்தறை, ஜூலை 13

திஸ்ஸ - கிருந்த என்னுமிடத்திலுள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஊழியர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கை கிழக்கில் தொடர்கிறது

கொழும்பு, ஜூலை 13

பாதுகாப்புப்படையினர் கிழக்குப்பகுதியில் தமது ''பொங்கும் கடல் அலைகள்'' தாக்குதல் நடவடிக்கையை நேற்றும் தொடர்ந்து மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினர் வாகரை நகரை தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்துள்ளனர் என்றும்—

பணிஞ்சங் கேணிப்பகுதியில் முன்னேறும் படையினர் விடுதலைப்புலிகளின் எதிர்ப்புக்கு முகம் கொடுக்கவேண்டியிருந்தது என்றும்— அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையிலிருந்து மக்கள் பெருமளவு இடம்பெயர்வு

கிழக்குப் பகுதியில் படையினர் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கையை, அடுத்து வாகரைப் பகுதியில் இருந்து 400 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து அறுநூறு பேர் இடம்பெயர்ந்து வாழைச்சேனைக்கு வந்துள்ளனர்.

கையில் அகப்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு குழந்தை குட்டிகளுடன் அவர்கள் இடம் பெயர்ந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## புலிகள் பின்வாங்கிவிட்டு மீண்டும் வந்து விடுவார்கள்

### கிழக்கு நிலவரம் குறித்து தராகி

கொழும்பு, ஜூலை 13

வாகரையில் இருந்து புலிகளை விரட்டினால் கிழக்கில் புலிகளின் அச்சுறுத்தல் இராது என்று அரசு கருதுகிறது. அங்கு நடைபெறப்போவது எதுவுமே இல்லை. புலிகள் பின்வாங்கிவிட்டு மீண்டும் அந்தப் பகுதிக்குள் வந்துவிடுவார்கள் என்றே நினைக்கிறேன். ஏனெனில் கிழக்கில் அதிக அளவு படைகளை நிறுத்திவைக்கும் நிலையில் அரசு இல்லை.

சண்டே ரைம்ஸ் பாதுகாப்புச் செய்தியாளர் 'தராகி' கிழக்கில் தற்போது இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கை குறித்து பி.பி.ஸிக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் இராணுவம் பெருநெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது.

எல்லைப் பகுதிகளில் புலிகள் அடிக்கடி தாக்குதல்களை மேற்கொள்வதால் அங்கிருந்து சிங்கள மக்கள் வெளியேறும் நிலையும், பாதுகாப்பற்ற ஒரு நிலையும் தோன்றியுள்ளது.

இந்த நிலையில் புலிகளுக்கு கிழக்கில் தளப்பிரதேசமாக உள்ள வாகரைப் பிரதேசத்தில் ஒரு தாக்குதலை மேற்கொண்டு அங்கிருந்து புலிகளைக் கலைத்து விட்டால் இந்த நெருக்கடி குறையும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

கிழக்கில் தற்காலிகமாக இராணுவ நடவடிக்கைகளை செய்யக்கூடிய நிலையில் அரசு உள்ளதே ஒழிய அங்கு பெரியளவில் புலிகளின் நடமாட்டத்தையும், தாக்குதல்களையும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வெடிமருந்துகள், ஆயுதங்கள் பெருமளவு கைப்பற்றப்பட்டன!

## வெள்ளவத்தைப் பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 13

வெள்ளவத்தையில் உள்ள ஒரு வீட்டில் இருந்து ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

100 கிலோ வெடி மருந்து, ஒரு துப்பாக்கி, ஒரு கைத்துப்பாக்கி, 50 சுற்றுரவைகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

மோட்டார் சைக்கிள் ஹைஏஸ் வான், கணணி இயந்திரம், இரண்டு ஷெல்டர் தொலைபேசிகள், ஒரு வானொலி, கஸட் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

பம்பலப்பிட்டியில் கடந்த 8 ஆம் திகதி வீதித்தடை போடப்பட்ட சமயம் ஓட்டோவில் வந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும்—

அவரிடமிருந்து இதுகுறித்த தகவல்கள் பெறப்பட்டதை அடுத்தே வெள்ளவத்தை வீட்டில் வியாழன் இரவு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வெடிமருந்துகள் காணப்பட்ட வீடு தற்சமயம் வெளிநாட்டில் தங்கியிருக்கும் தமிழர் ஒருவருக்குச் சொந்தமானது.

அவரது பாரியார் உட்பட 8 சந்தேக நபர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்தப் பொருள்களை ஒரே தடவையில் கொழும்புக்கு கொண்டுவந்திருக்க முடியாது என்றும் —

பல தடவைகளில் அவை கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனவும் —

பொலீஸார் தெரிவித்தனர். [இ-3]

## கைதடியில் மாணவரும் காயம்

கைதடியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற சம்பவத்தில் மாணவர் ஒருவரும் காயமடைந்தார்.

கைதடி வடக்கைச் சேர்த்த ஆ. காண்டீபன் (வயது 18) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

இவர் தற்போது நடை ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றிவரும் மாணவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பங்கீட்டுக்கு குத்தரிசி; 3 கிலோ வழங்க ஏற்பாடு

பங்கீட்டு அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூன்று கிலோ குத்தரிசி வழங்கப்படவிருக்கிறது.

வர்த்தகத் திணைக்களத்தினால் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட அரிசி [illegible] மூலமும் —

கூ. மொ. வி. திணைக்களத்தினால் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட அரிசி ப. நோ. கூ. சங்க கிளைகள் மூலமும் — வழங்கப்படவிருக்கின்றது.

வர்த்தகத் திணைக்களக் கிளையிலோ ப. நோ. கூ. சங்கக் கிளையிலோ பங்கீட்டு அட்டையைச் சமர்ப்பித்து அரிசியைப் பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி சென்ற ஆசிரியர் அங்கேயே பணி புரியலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

வன்னி மாவட்டத்தில் பணியாற்றும் இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் அங்கு தொடர்ந்து பணியாற்றலாம் என்று வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அந்த மாவட்ட மாணவர்களின் நலன்கருதி தொடர்ந்து அங்கு பணியாற்ற அனுமதிக்கப்படுவர் என்று அந்த மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிய பணிப்புரையில் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

## தொழிற்பயிற்சி இறுதிப் பரீட்சை

தொழில்நுட்பக் கல்லூரியின் தொழிற்பயிற்சி நெறிக்கான இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றன.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் விமானமூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

## குடாநாட்டு புகையிலை கொழும்புக்கு

வடமராட்சி, ஜூலை 13

யாழ். குடாநாட்டிலிருந்து புகையிலை கப்பல் மூலம் தென்பகுதிக்கு எடுத்துச்செல்லப்படுகின்றது.

இதற்கென, வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து பெருந்தொகையான புகையிலைச் சிப்பங்கள் தனியாரினால் சேகரிக்கப்பட்டுவருகின்றன. (இ-173)

## வயோதிபரிடம் பணம் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

கூலிவேலை செய்து விட்டு கூலிப்பணத்துடன் திரும்பிய வயோதிபர் இடைவழியில் அப்பணத்தைப் பறிகொடுத்ததுடன், கத்திக்குத்துக்கும் உள்ளாகிப் படுகாயமடைந்தார்.

தாவடியில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

சுதுமலையைச் சேர்ந்த பெரியதம்பி சுந்தரம் (வயது65) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சம்பவதினம் யாழ்ப்பாணத்தில் வேலை செய்துவிட்டு திரும்பிய இவரை தாவடியில் எதிர்கொண்ட ஒருவர் அவரது ஷேட் பொக்கற்றுக்குள் இருந்த பணத்தை அபரித்துக் கொண்டு ஓடினாராம்.

பணத்தைப் பறிகொடுத்தவர் அத்திருடனைப் பின் தொடர்ந்து துரத்தியவேளை திருடன் கிறிஸ் கத்தியால் அவரது காதுப்பகுதியில் குத்திவிட்டுத்தப்பிச் சென்றதாகத் தெரியவருகிறது. (இ-15)

## பிஹாரில் 18 பேர் கொலை

புதுடில்லி, ஜூலை. 12

பிஹாரில்போஜ்பூர் மாவட்டத்தில் கிராமம் ஒன்றில் ஆயுதம் தாங்கியவர்கள் தாக்கியதில் 18 பேர் கொல்லப்பட்டனர். 5 பேர் காயமடைந்தனர்.

இந்த கிராமத்தைச் சுற்றி வளைத்தவர்கள் கண்மூடித்தனமாக சுட்டதுடன் 70 குடிசைகளுக்கும் தீவைத்தனர்.

இறந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேரும் அடங்குவர். (இ-3)

## தமிழ் வர்த்தகரிடம் கப்பம்; மூன்று முஸ்லிம்கள் கைது

கொழும்பு, ஜூலை 13

தமிழரான வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்திக் கப்பம் பெற்ற மூன்று முஸ்லிம்களை கொழும்பு வாழைத்தோட்டப் பொலீசார் கைது செய்துள்ளனர்.

வாழைத்தோட்டப் பொலீஸ் பகுதிக்குள் வாழும் மூன்று முஸ்லிம் இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இனந்தெரியாத இளைஞர்களின் புகைப்படங்களை தமிழ் வர்த்தக நிலையங்களுக்குக் கொண்டுசென்று அப்படத்திலுள்ளவர்கள் விடுதலைப் புலிகள் எனவும் —

அவர்கள் குறித்த தமிழ் வர்த்தகர்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் — தெரிவித்து இவர்கள் கப்பம் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## கேரதீவு நோக்கி வந்தவர் கடலில் மூழ்கி மரணம்

தென்மராட்சி, ஜூலை 13

வன்னியிலிருந்து பூநகரி கடல் வழியாக கேரதீவு நோக்கி நடந்துவந்து கொண்டிருந்த ஒருவர் கடலில் மூழ்கி மரணமானார்.

கடந்த புதன்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

மாவிட்டபுரம் கொல்லன் கலட்டியைச் சேர்ந்த வைரவப்பிள்ளை இராசதுரை (வயது 47) என்பவரே மரணமானவர் ஆவார்.

இவரது சடலம் நேற்று பிற்பகல் கேரதீவு கடற்கரையில் ஒதுங்கியது.

சம்பவதினமான புதன்கிழமை இரவு தமது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் பத்துப்பேருடன் இவர் நடந்து கேரதீவு நோக்கி வந்து கொண்டிருந்தார் என்றும்—

அப்பொழுது கடல் அலையில் சிக்குண்டு காணாமற் போயிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு நேற்று எடுத்துவரப்பட்டது.

சாவகச்சேரி திடீர் மரணவிசாரணை அதிகாரி நா. தர்மேந்திரா விசாரணை நடத்தி நீரில் மூழ்கியதால் மரணம் சம்பவித்தது என்று தீர்ப்பு வழங்கினார். (இ-31-117)


சுன்னாகம்பல நோ.கூ. சங்கம் (வ - து)
சுன்னாகம்.

**வெற்றுச்சாக்கு, கழிவுசீனி விற்பனை அறிவித்தல்.**

மேற்படி சங்கத்தில் இருக்கும் வெற்றுச்சாக்குகள், கழிவு சீனி ஆகியன கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. கேள்விப்பத்திரங்களை சங்க வேலை நாள்களில் பெற்று விண்ணப்பித்துக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 20.07.96 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.
11.07.96

சி - 2618



பருத்தித்துறை
ஆதார வைத்தியசாலை
ஊழியர் நலன்புரிச் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்

**சிற்றுண்டிச் சாலைக்கும், கடைக்குமான குத்தகை கேள்வி அறிவித்தல்**

மேற்படி சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சிற்றுண்டிச் சாலையையும், கடையையும் 1996 ஆவணி மாதம் முதல் ஒரு வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

வைத்தியசாலை பணிமனையில் ரூபா 100/- செலுத்தி விண்ணப்ப படிவத்தை பெற்று 19-07-96 அன்று மு. ப. 10 மணிக்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.

க. தவராஜசிங்கம்
செயலாளர்.
(C/ 41761)



**இதய அஞ்சலி**

வண்ணை நாவலர் மகாவித்தியாலய முன்னாள் அதிபரும், நாவலர் தர்மகர்த்தாசபை மூத்த உறுப்பினருமாகிய

**வித்துவான் இ. திருநாவுக்கரசு**

அவர்களின்

மரணச்செய்திகேட்டு நாம் பெருந்துயர் அடைந்தோம். அன்னாரின் மறைவு எமது வித்தியாலய வளர்ச்சிக்கும் - தர்மகர்த்தாசபையின் செயற்பாடுகளுக்கும் பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
நாவலர் தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள்.
(41765)



**நினைவஞ்சலிக் கூட்டம்**

அமரர்
**சிவக்கொழுந்து இராஜேந்திரன்**

(சட்டத்தரணி, சமாதான நீதிவான் மானி - இந்துவின் பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர், முன்னாள் இயக்குனர் சபையின் அங்கத்தவர்)



அமரர் இராஜேந்திரன் அவர்கட்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நன்றியுடன் அஞ்சலி செலுத்துகிறது.

இடம்: யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி வாகீசர் மண்டபம்

காலம்: 14 - 07 - 1996 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 - 00 மணி

(41744) பழைய மாணவர் சங்கம்



**உதயம் வாடகைக்கு**

பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல. வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

உதயம்
வைற் கவுஸ் அருகில்
(41768) 172, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
**The Jaffna Education Centre**

வருடம் 6, 7, 8, 9, 10,
G.C.E. O/L, A/L
Spoken English With Grammer
Shorthand Typing

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலம் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 13-07-1996

இ. லோகநாயகி
(41763)



**A/L மாதிரிப் பரீட்சை MODEL EXAMINATION 96**

கணித — உயிரியல் — கலை — வர்த்தக பிரிவுகளுக்கான எல்லாப் பாடங்களும்

ஆரம்பம் :- 20-07-96

விபரங்களுக்கு:-
பதிவாளர்
பரீட்சைப்பகுதி
(41753)

BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து நரசிம்மராவை நீக்குவதற்கு முயற்சி

புதுடில்லி, ஜூலை 13

இந்தியாவின் சர்ச்சைக்குரிய சந்திரா சுவாமி செய்த மோசடி வழக்கில் முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் தலைவருமான பி. வி. நரசிம்மராவை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து —

காங்கிரஸ் தலைமைப் பதவியில் இருந்து அவரை நீக்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்கள் புதுடில்லியில் உள்ள நரசிம்மராவின் இல்லத்துக்கு முன் கூடி அவர் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதன் பின்னணியில் காங்கிரஸ் செயற்குழு நேற்று கூடவிருந்தது.

ராவ் அதிருப்தியாளர்கள் அனைவரையும் ஓரணியில் கொண்டுவரும் முயற்சியாக கட்சிக்குள் கையெழுத்து வேட்டை நடந்து கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

காங்கிரஸ் தலைவர்கள் கருணாகரன், அஜித்சிங் ஆகியோர் ராவை தலைமைப் பதவியில் இருந்து அகற்ற ஆதரவு திரட்டி வருகிறார்கள்.

[இ-3]

## தேவகௌடா அரசு விரைவில் கவிழ்ந்துவிடும்

### பாரதீய ஜனதா தெரிவிப்பு

புதுடில்லி, ஜலை. 13

பிரதமர் தேவகௌடாவின் ஐக்கிய முன்னணி அரசு ஆறு அல்லது ஏழு மாதங்களில் கவிழ்ந்து விடும் என்று பாரதீய ஜனதாக்கட்சிப்பேச்சாளர் சுஸ்மா தவராஜ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்குள் கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் தோன்றியுள்ளன. இந்த அரசு நிலை நிற்காது. விரைவில் நாடு தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை — பாரதீய ஜனதாக்கட்சி மற்றொரு தேர்தலுக்கு ஆயத்தம் செய்து வருவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (இ-3)

## பூட்ரஸின் பதவி நீடிப்புக்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு

ஐ. நாவின் தலைமைச் செயலர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி தமது இரண்டாவது பதவிக்காலத்துக்குப் போட்டியிடுவதை அமெரிக்கா எதிர்க்கிறது.

இதை மறுபரிசீலனை செய்யுமாறு அமெரிக்காவிடம் ஆபிரிக்கத் தலைவர்கள் கேட்டுள்ளனர்.

ஆபிரிக்கா ஒற்றுமை அமைப்பின் தலைவர் சலிம் அகமட்சலீம் இத்தகவலைத் தெரிவித்தார். (இ-3)

## நெல்சன் மண்டேலா பிரிட்டன் விஜயம்

தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா முதல் முறையாக பிரிட்டனுக்கு ராஜாங்க விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அங்கு அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இரு சபைகளிலும் அவர் உரையாற்றினார்.

''தென்னாபிரிக்காவை புறக்கணிக்க வேண்டாம்'' என்று அவர் உலகத் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

80 ஆண்டுகளுக்கு முன்னர் எமது முன்னோர்கள் லண்டனுக்கு வந்து கறுத்த இனத்தவர்கள் வெள்ளையருக்கு சமமாக நடத்தப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் அந்த வேண்டுகோள் கவனிக்கப்படவில்லை என்று அங்கு பேசுகையில் அவர் தெரிவித்தார். (இ-3)

## தீக்கோழி மீது சவாரி கின்னஸ் சாதனை

தாய்பே, ஜூலை. 13

இரண்டு நிமிடங்களுக்கு மேல் தீக்கோழி மீது சவாரி செய்து உலக சாதனை படைத்துள்ளது ஒரு ஜோடி.

தீக்கோழி மீது சவாரி செய்யும் போட்டி ஒன்றை தாய்வான் நூதனசாலை நடத்தியது. இதில் 43 ஜோடிகள் பங்குபற்றினர்.

ஹாங்ஷின் ஷியாவும் அவரது காதலி வாங்-மீ-யூனும் 2 நிமிடம் சவாரிசெய்து வெற்றி பெற்றனர்.

கின்னஸ் புத்தகத்தில் இவர்கள் பெயர் பதிவு செய்யப்படுவதுடன் உலக கின்னஸ் புத்தகத்தின் பதிவேட்டிலும் இவர்களின் பெயர்கள் பொறிக்கப்படும் என்று நூதன சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)

**காவிரி நீர் தகராறு;**

## உடனடி விசாரணைக்கு உயர் நீதிமன்றம் மறுப்பு

சென்னை, ஜூலை 13

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின் படி கடந்த மாதத்தில் இருந்து இம்மாதம் 7ஆம் திகதி வரை காவிரியில் இருந்து விடுவிக்கப் படவேண்டிய தண்ணீரில் மீதமுள்ள 1500 கோடி கலன் தண்ணீரை உடனடியாக விடுவிக்குமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி தமிழ் நாடு தாக்கல் செய்திருந்த மனு மீது உடனடி விசாரணை நடத்த உயர் நீதிமன்றம் மறுத்து விட்டது.

இந்த மனுவ்வ உயர் நீதிமன்றத்தில் தமிழ் நாடு அரசு இம்மாதம் 8 ஆம் திகதி தாக்கல் செய்தது.

இந்த மனுவை உடனடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மறுத்த தலைமை நீதிபதி ஏ, எம். அகமதியும், நீதிபதிகே.எஸ்.பரிபூரணனும் இதற்கு இரு காரணங்களை குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ் நாடுஅரசு ஏற்கனவே சமர்ப்பித்தமனுவைவிசாரித்த நீதிபதி விடுமுறையில் சென்றுள்ளதாலும். —

கர்நாடக அரசு உடனடியாக 500 கோடி கன அடி தண்ணீரை திறந்து விட்டுள்ளதாலும்- மனு மீது உடன் விசாரணை நடத்த முடியாது என நீதிபதிகள் தெரிவித்தனர்.

(இ- 3)

## சசிகலா மீது கருணாநிதி குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை.12

''தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நெருங்கிய சகாவான சசிகலா தமிழ்நாட்டின் 500க்கும் மேற்பட்ட சொத்துக்களை கொள்முதல் செய்தார்'' என்று முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

வெளியிடப்பட்ட சுமார் 10 சொத்துக்களின் பெறுமதி மட்டும் 200 கோடி ரூபா இருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ - 3)

## உலக அரங்கில்

### ஆந்திராவில் திராவிட பல்கலைக்கழகம்

புதுடில்லி, ஜூலை 13

திராவிட பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ ஆந்திரஅரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கு மத்தியஅரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திராவிட மக்களின் கலை, பண்பாடு, இலக்கியம் அவர்களின் சமூகஉணர்வுகள் ஆகியவற்றை வெளிஉலகுக்கு பறைசாற்றும் மையமாக திகழும் இப்பல்கலைக்கழகத்துக்கு தமிழக அரசு முதல் தவணையாக 50 லட்சம் ரூபா வழங்கியுள்ளது.

(இ-3)

## கருத்தடை செய்த பின்பும் கர்ப்பம் தரித்த பெண்

### 30 ஆயிரம் டொலர் நஷ்டஈடு

டொரண்டோ, ஜூலை 13

கருத்தடை செய்த பின்னரும் தனக்கு கருத்தரித்ததை ஆட்சேபித்து, அக்கருத்தடையைச் செய்த டாக்டருக்கு எதிராக ஒரு தம்பதியினர் வழக்குத் தொடுத்தனர்.

இந்த வழக்கை ஆராய்ந்த கனடா, டொரண்டோ நீதிமன்றம் அத்தம்பதியினருக்கு நஷ்ட ஈடாக 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழக்குமாறு உத்தரவிட்டது.

இரு பிள்ளைகளைப் பெற்ற இத்தம்பதியினர் மேலும் குழந்தை பெற விரும்பாது கருத்தடை செய்ததாகவும் —

அதன்பின் ஒருவருடம் கழித்து மற்றொரு குழந்தையை பிரசவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# அரசின் அரசியல் தீர்வுத் திட்டம் நிறைவேறுவது சாத்தியமில்லை!

## அரசியல் விமர்சகர்கள் கருத்து

அரசாங்கத்தின் சமாதானத் தீர்வுத் திட்டம் கைவிடப்படலாம் என்று வெரித்தாஸ் வானொலி தனது சிங்கள சேவையில் ஒலிபரப்பிய அரசியல கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

அரசியல் விமர்சகர்களும், ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்களும் வெளியிட்ட கருத்துக்களை ஆதாரமாக வைத்து அந்தக் கண்ணோட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

அந்தக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் அரசு முன்வைத்துள்ள சமாதானத் திட்டம் இன்னும் அரசியல் ரீதியான முன்னேற்றத்தைக் காணவில்லை என்று அரசியல் விமர்சகர் பாக்கியசோதி சரவணமுத்து றோயிற்றர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

இராணுவ ரீதியில் வெற்றிகளைப் பெற்றுள்ள அரசு அரசியல் ரீதியான வெற்றிகளை ஈட்டுவதனை ஐக்கிய தேசியக் கட்சி விரும்பாது. அதனால் அரசின் தீர்வுத் திட்டத்துக்கு அக்கட்சி ஒத்துழைப்பு வழங்காது.—

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படின், ஸ்ரீலங்கா அரசுக்கு உள்ள பல பிரச்சினைகள் தீர்ந்து விடும் அபிவிருத்திக்கும் வாய்ப்பு உருவாகும். ஆனால் ஐ. தே. கட்சி தீர்வுத்திட்டத்தை அதன் இப்போதைய வடிவத்தில் ஒரு போதும் ஆதரிக்காது. அவ்வாறு அக்கட்சி ஒத்துழைப்பு வழங்கத் தவறும் போது தீர்வுத்திட்டம் ஸ்ரீலங்கா மக்களால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது — என்று பாக்கியஜோதி சரவணமுத்து தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் கருணசேனா கொடித்துவக்கு கருத்து வெளியிடுகையில்,—

பிராந்திய சபை ஆட்சி முறையை தமது கட்சி ஏற்றுக்கொள்ளாது என்றும்,—

சமாதானத் தீர்வுத் திட்டத்தில் எந்தவொரு மாற்றத்தையும் மேற்கொள்ளாமல் அதனை ஏற்றுக் கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சியை வற்புறுத்த முடியாது என்றும்— கூறினார்.

அதிகாரத்தை பரவலாக்குவது பற்றிய பிரச்சினையை விட அதிகாரத்தை எந்தளவிற்கு பரவலாக்கலாம் என்பது பற்றியே ஐ. தே க. அக்கறை கொண்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

இத்தகைய நிலையில் அரசு சமாதானத் தீரவு ஒன்றை நிறைவேற்ற வேண்டுமாயின் அது ஐ. தே. கட்சியின் ஒத்துழைப்புடனேயே தயாரிக்கப்படவேண்டும்.

அதே வேளை சமாதானத் தீர்வுத் திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவரின் அதைத் தாம் அனுமதிக்கப் போவதில்லை எனத் தமிழ் கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஒரு கோடி மக்கள் தொகையைக் கொண்ட இலங்கையில் 20 வீதமான தமிழ், முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பின்றி சமாதானத்தை உருவாக்க முடியாது என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

—இவ்வாறு அந்தக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப் பட்டது. (அ-10)

## ஒக்ஸ்பாம் உதவிப்பொருள் தடுத்து வைப்பு

கொழும்பு, ஜூலை 13

யாழ்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சி வந்துள்ள தமிழர்களுக்கு குடிசைகள் அமைப்பதற்காக ''ஒக்ஸ்பாம்'' தொண்டு நிறுவனம் ஏற்றிவந்த 3லட்சம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கூரைகள், மற்றும் தென்னை ஓலைகள் தாண்டிக்குளம் தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-3)

## இரவில் நடமாட படையினர் தடை

கொழுபு' ஜூலை. 13

மட்டக்களப்பு நகருக்குள் இரவுவேளைகளில் மக்கள் நடமாடுவதைப் பாதுகாப்புப்படையினர் முற்றாகத் தடை செய்துள்ளனர்.

நகருக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவியிருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

கடந்த ஞாயிறு முதல் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் (கொடிகாமம் சந்திக்கு வெகு சமீபமாக) 16 பரப்புடன் தென்னை, மா, பலா உள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு, ஆர். வி. கந்தசாமி, 46, ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். இல: 41756

### (O/L) MATHS 96

ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இது வரையும் கித்தியடையாதவர்களுக்கும் 30 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் No:- 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (41750)

30 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து சகல Section களும் Portion களும் நிறைவேற்றப்பட்டு, Section & Portion Revison உடன் Past Papers practiceம் 40 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. (41749)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. (41726)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா வாத நோய்கள், வலிப்பு நோய், மாதவிடாய் குத்து குழந்தை வைத்தியம், மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபல மானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். இல: 41747.

### வீனஸ் அன்ரனா

ரீவி நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு பழைய புதிய அன்ரனாக்களை சரி செய்து பொருத்திக் கொடுக்கப்படும். மணிக்கூடு, றேடியோ, ரீவி, டெக் திருத்திக் கொடுக்கப்படும். வீனஸ் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (41707)

### விநியோகிக்கப்படுகிறது

Dr. அல்போன்சஸ் அத்தனாசியார் (சில்லாலை), 372, பிரதான வீதி சுண்டிக்குழி, யாழ்ப்பாணம் (பழைய இடத்தில்) மீண்டும் இயங்குகின்றது. சகல விதமான மருத்தெண்ணெய் விநியோகம் மட்டும் நடைபெறும். தகவல்: செல்வி M. அன்ரனிப்பிள்ளை. (41736)

### விற்பனை

5000 வெற்றுச்சாக்குகளும், 5000 வெற்று உரப்பைகளும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. மீளப்பெறக் கூடிய வைப்புப்பணம் ரூபா 500/- செலுத்தி 20.7.96 சனிக்கிழமைக்குமுன் விண்ணப்பிக்கவும். த. பேரம்பலம் பொது முகாமையாளர் நல்லூர் ப. நோ. கூ. சங்கம். (சி-2621)

## ஆண்டு 5 (புலமைப்பரிசில்)

பரீட்சைக்காக – பயிற்சிப் பரீட்சைகள் ஒவ்வொரு ஞாயிறும் - 6 பிரிவுகளாக நடத்தப்படுகின்றன பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை / தனியார் கல்வி நிறுவனங்கள் புத்தகசாலைகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

பதிவாளர் பரீட்சைப்பகுதி. **BOND INSTITUTES** 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (41754)

# பற்றீஷன் தொழில் பயிற்சி நிறுவனங்கள்

## PATRICIAN INSTITUTES

தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**திகதி :- 22 - 07 - 96 திங்கட்கிழமை**

(1) COMPUTER COURSES:
(a) BASIC (b) LOTUS 1 - 2 - 3 (c) d BASE III PLUS
★ DURATION :- 4 MONTHS.
(2) CIVIL DRAUGHTSMANSHIP
★ Qualification:- G. C. E (O/L) ★ DURATION :- 6 MONTHS
(3) SHORT HAND AND TYPING (ENGLISH).
(4) GENERAL MOTOR MECHANISM — (Petrol & Diesel)
மோட்டார் வாகனம் திருத்துதல் ★ DURATION :- 6 MONTHS.
(5) ELECTRICAL WIRING — மின்சார இணைப்பு
★ DURATION :- 3 MONTHS.
(6) MOTOR REWINDING — மோட்டார் றீவைண்டிங்
★ DURATION :- 4 MONTHS.
(7) GENERAL ELECTRICIAN — ஜெனரல் எலக்றீஷன்
★ DURATION :- 6 MONTHS.
(8) LATHE MACHINE OPERATION — கடைச்சல் இயந்திர தொழில் பயிற்சி
★ DURATION :- 3 MONTHS.
(9) ARC WELDING — மின் ஒட்டுனர் பயிற்சி
★ DURATION :- 2 MONTHS.

NOTE:-
★ பயிற்சிக் கட்டணங்கள் தவணை அடிப்படையில்!
★ வன்செயலால் பாதிக்கப்பட்டவர்கள் (Parish Priest) பங்குக்குருவின் சிபார்சின் பேரில் கட்டணத்தில் சலுகை பெறலாம்.
★ பயிற்சி நெறிக்கான கட்டண விபரம், விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் பெறலாம்.

வாகன தகுதிச் சான்றிதழ் — '96 MOTOR FITNESS' 96
96 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழை எமது நிறுவத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
பரிசோதகர்: Mr. A. S. GUNASEELAN (Automobile Engineer)

மேலதிக விவரங்களுக்கு;
**REGISTRAR.**
**Patrician Institute of Higher Studies**
59, St. Patrick's Rd,
Jaffna. (C-2699)

# பிறந்த நாள் வாழ்த்து

செல்வன்
★ **அமிர்தன் திருக்குமரன்** ★

தெல்லிப்பழை திருக்குமரன் சுழிபுரம் வனிதா, தம்பதிகளின் பெருநிதி அமிர்தன் தனது முதலாவது பிறந்தநாளை நேற்று (12 - 07 - 96) தனது கொழும்பு இல்லத்திற் கொண்டாடினார், இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, மாமாமார், மாமிமார், சித்தி, ஆசைமாமா (ரஞ்சன்), மச்சான், மற்றும் பலர் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
க. வேலாயுதபிள்ளை (தாத்தா)
சுழிபுரம்.
(41741)

# யூப்பிட்டர் கல்வி நிலையம்

(கிளை நிறுவனம்)
டச்சு வீதி, சாவகச்சேரி.

**ஆண்டு: 8, 9, 10, 11**
**ஆரம்பம்: 14-07-1996**

ஞாயிறு பி. ப. 1 30 மணி வழமையான ஆசிரியர் குழு
★ பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்.
★ மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதால் முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

— நிர்வாகி
(சி/2615)

மீண்டும் மாணவர்களின் நன்மைகருதி
இருபாலை

# எக்ஸ்பிரஸ் இனிஸ்ரிரியூட்

**ஆண்டுகள் 4 முதல் O/L வரை**
ஆரம்பம்: **21-07-1996**
ஞாயிறு காலை 8.30 இற்கு

**கணிதம்: திரு. வரதன் (அதிபர்)**
ஏனைய வழமையான ஆசிரியர் குழு

ஒரு வகுப்பில் ஒருபிரிவு மட்டுமே
அனுமதிகளுக்கு முந்துங்கள்

குறிப்பு: எமது நிறுவன ஆசிரியர்கள் அனைவரும் 18 - 07 - 1996 பிற்பகல் 3 மணிக்குச் சமுகமளிக்கவும்.

அதிபர்
(41719)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 21 — 03 — 1977



உதிர்வு: 13 — 06 — 1996

## வேலு சனகன்

(மாணவன், தெல்லி. யூனியன் கல்லூரி)

ஆண்மகவு எமக்கு அருளிட வேண்டுமென்று
வேண்டிய வரத்தை விருப்புடனே தந்தவனே—
மார்க்கண்டேயருக்கு
பதினாறு வைத்தது போல் எம் சனகனுக்கு
நீ வைத்தது பத்தொன்பது தானோ
அம்மாவும் அப்பாவும் அக்காக்களுடன்
தங்கையையும் தாங்காத
துயரினிலே தத்தளிக்க விட்டிங்கு நீ மட்டும்
பாதை மாறி பரமன் பதம் பற்றியது ஏனோ,
உற்றாரும், உறவினரும் உன்னை வட்டமிடும்
நண்பர்களும் தேடி அலைய
தெய்வம் தாழ் நீ சேர்ந்தது தகுமோ.
மாதமொன்று கடந்தது ஐய! உன் மதிமுகமும்
நாம் பார்த்து
வேண்டுன்கிறோம் அவனடியே
உன் ஆத்மா அடையட்டும் சாந்தி என்றே
சாந்தி! சாந்தி!

அப்பா, அம்மா, அக்காமார்,
தங்கை, உற்றார், உறவினர்.

தற்போதைய முகவரி:
அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு. (கைதடி நாவற்குளி, கைதடி)
(41740)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FUBLIC LIBRARY
உதயன்
JAFFNA.



# உதயன்

## மனித உரிமை பேணுதல்

புதிதாக மனித உரிமை ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதற்கு முடிவாகி உள்ளது. அதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அரசாங்க அதிகாரிகள் மற்றும் படையினர் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறி நடந்ததாகக் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு இருக்கும்.

எனினும் ஆணைக்குழுச் சட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன.

குறிப்பாக அரச அதிகாரி ஒருவரின் மனித உரிமை மீறல் செயற்பாட்டினால் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்குமாறு ஆணைக்குழு வெறுமனே சிபார்சு மட்டுமே செய்யலாம். அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் அதற்கு இல்லை!

அதேபோல, மனித உரிமை மீறலால் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்கப்படாவிடின் சம்பந்தப்பட்டவர் அதனை எதிர்த்து மேல் நீதிமன்றத்திலோ உயர் நீதிமன்றத்திலோ வழக்குத் தாக்கல் செய்து நீதிபெறுவதற்கு ஆணைக்குழுச் சட்டம் வகை செய்யவில்லை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, நீதிமன்ற உத்தரவு இல்லாமலே, தக்க காரணம் கூறாமலே எவரையும் கைது செய்வது இந்தச் சட்டத்தின் மூலம் தடுக்கப்படவில்லை.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமலே பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கும் அநீதிக்கும், மனித உரிமை மீறலுக்கும் புதிய ஆணைக்குழுச் சட்டம் முற்றுப்புள்ளி வைக்க அரசு தவறிவிட்டது.

மொத்தத்தில் மனித உரிமை ஆணைக்குழுச் சட்டம், அரச அதிகாரிகளினதும், படை அதிகாரிகளினதும் மனித உரிமை மீறல்களை முற்று முழுதாகத் தடுக்கும் வலுவில்லாத, முலாம் பூசிய பழைய உலோகமாகவே விளங்குகிறது.

தக்க காரணம் காட்டாமலும், நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர் செய்யாமலும், நீண்ட காலமாக ஒருவரைத் தடுப்புக்காவலில் வைத்திருக்க வகைசெய்யும் அவசரகாலச் சட்ட மற்றும் பயங்கரவாதச் சட்ட விதிகள் நீக்கப்படாதவரை அரசின் மனித உரிமை மீறல்களைத் தடுக்க ஓர் ஆணைக்குழுவினால் மட்டுமல்ல, பத்து ஆணைக்குழுக்களாலும் இயலாது.

அரச அதிகாரிகளினாலும், படை அலுவலர்களினதும் அடிப்படை உரிமை மீறல் நடவடிக்கைகளால் இப்போது பெருமளவில் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் மக்களே.

அதனால், மனித உரிமை மீறல்களை உள்ளார்ந்த ரீதியாகத் தடுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதில் அவர்கள் அதிக அக்கறையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

வெறும் பேச்சிலும், எழுத்திலும் மனித உரிமைகளைப் பேணுவதில் கரிசனை இருப்பதாக அரசு காட்டிக்கொள்வதால் எவ்வித பயனுமில்லை.

இத்தகைய பெயர் கேட்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஒருபோதும் தமிழர்களின் அவலங்களைத் தீர்க்க உதவப்போவதில்லை.

# தேசிய பாடசாலை முறை ஒழிக்கப்பட வேண்டும்

### மாகாண முதலமைச்சர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 13

தேசிய பாடசாலை முறை ஒழிக்கப்படவேண்டும் என்று மாகாணமுதலமைச்சர்கள் கோரியுள்ளனர்.

சொழும்பில் நேற்று முன் தினம் நடந்த முதலமைச்சர்கள் கூட்டத்தில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

தேசிய பாடசாலை முறை பாரபட்சமானது என்றும்—

மாணவர் மத்தியில் பிளவு ஏற்படுவதற்கு இது வழி கோலுகிறது என்றும்—அவர்கள் கூறியுள்ளனர்.

தேசிய பாடசாலை முறையின் கீழ் சில பாடசாலைகள் மத்திய அரசாங்கத்தின் உதவியை பெற்று வருகின்றன. ஏனையவை அவற்றின் நிதித் தேவைக்கு மாகாண சபைகளிலேயே தங்கியுள்ளன. இதனால் அந்தப்பாடசாலைகள் குறைந்த வசதிகளுடன் இயங்குகின்றன.

தேசிய பாடசாலை முறை மாகாண கல்வி அமைச்சர்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்துகின்றது—என்றும் முதலமைச்சர்கள் கூறுகின்றனர்.

## 5 ஆம் ஆண்டுபுலமைப்பரிசில் பரீட்சை நாளை நடக்கும்

1995 ஆம் ஆண்டு நடைபெறாது ஒத்திவைக்கப்பட்டிருந்த ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடைபெறவிருக்கின்றன.

இப்பரீட்சை விசேட பரீட்சையாக நடத்தப்படுகிறது.

அதேவேளை இவ்வாண்டுக்கான 5 ஆம்ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெற விருப்பதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ - 11 - 152)

## நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 13

இலங்கை நிர்வாக சேவையின் 2 ஆம் வகுப்பின் 2 ஆம் தரத்துக்கு திறமை வழிப் பதவியேற்றம் மூலம் நியமனம் பெறுவதற்கான போட்டிப் பரீட்சை 93 எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

இப்பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் யாழ். கல்வித் திணைக்களத்தால் நேற்று தபாலில் அனுப்பப்பட்டன. (இ-3)

## கப்பல் மூலம் 700 பேர் நாளை திருமலைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 13

காங்கேசன் துறையில் இருந்து 700 பயணிகள் நாளை கப்பல் மூலம் திருகோணமலைக்கு பயணமாகிறார்கள்.

இக்கப்பலில் பயணம் செய்யும் பயணிகளின் விவரங்கள் அடங்கிய பட்டியல்கள் இல. 33, 34, 36, 54 ஆகியன சிவில் விவகாரங்கள் பிரிவு அலுவலகத்தில் நேற்று பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இக்கப்பலில் பயணம் செய்பவர்கள் நாளை பிற்பகல் 3 மணிக்கு இரவுச்சாப்பாட்டுடன் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு வருமாறு சிவில் விவகாரங்கள் பிரிவு கேட்டுள்ளது.

## போட்டிப் பரீட்சை

வடக்கு- கிழக்கு மாகாண சபையால் கடந்த ஜனவரி மாதம் விண்ணப்பம் கோரப்பட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

அதேவேளை. கூட்டுறவு பரிசோதகர் பதவிக்கான போட்டிப் பரீட்சைகள் இன்று நடைபெறுகின்றன. (இ-3)

## கெயர் உதவி

வடமராட்சி, ஜூலை 13

மாதாந்த உதவிப் பணம் பெறும் குடும்பங்களுக்கு சர்வதேச கெயர் நிறுவனம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் பெறுமதி வாய்ந்த பாவனைப் பொருள்களை வழங்கி வருகிறது.

வடமராட்சிப் பிரதேசத்தில் கிராமசேவை அலுவலர் பிரிவுகள் தோறும் இவை வழங்கப்பட்டு வருகின்றன.

பிளாஸ்ரிக் வாளி, பிளாஸ்ரிக்லான குளியல்வாளி, சாப்பாட்டுக் கோப்பை, தண்ணீர் பாத்திரம், சாரம், ரீசேட், சேலை, சட்டைதுவாய் போன்ற பொருள்கள் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைக்கேற்ப வழங்கப்பட்டு வருகின்றன. (இ-173)

### "கள்ளக்கரண்ட்" எடுத்த

## முன்னாள் அமைச்சருக்கு நீதிமன்றிலும் அபராதம்

மின்சாரத்தை சட்ட விரோதமாகப் பெற்று பயன்படுத்திய குற்றத்துக்காக முன்னைய அரசாங்கத்தில் திட்டமிடல் அமைச்சராகக் கடமையாற்றிய டாக்டர் விமல் விக்கிரம சிங்கவுக்கு 77 ஆயிரத்து 700 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஹங்கடவெல நீதிபதி என் .பி. கருணாதிலகா இந்த அபராதத்தை விதித்தார்.

பொலிஸார் அவரை நேற்று முன்தினம் கைது செய்து நேற்று நீதிபதி முன் ஆஜர் செய்திருந்தனர்.

இவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு முன்னர் மின்சார சபையும் இவருக்கு 96 ஆயிரத்து 722 ரூபா 48 சதம் அபராதம் விதித்ததும்—

அந்த வேளை வீட்டில் இருந்த அவரது மனைவி உடனடியாக அபராதத்தைச் செலுத்தியதும் தெரிந்ததே.

எனினும் குற்றமிழைத்தவர்களுக் கெதிராக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக அவர் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். (இ-3)

# சம்பளத்தை அதிகரிக்கக் கோரி 3 அதிபர்கள் நீதிமன்றில் வழக்கு

கொழும்பு, ஜூலை. 13

1996 - 3 - 28 ஆம் திகதிய 10/96 இலக்க சுற்றறிக்கைப்படி தமது சம்பளம் அதிகரிக்கப் படவேண்டும் என்றும்—

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரின் ஆணைப்படி அதிபர்களுக்கான சம்பள அதிகரிப்பு தமக்கு கிடைக்காமல் இருப்பது அடிப்படை உரிமை மீறும் செயல் எனவும் கோரி அனுராதபுர மாவட்டத்தை சேர்ந்த மூன்று அதிபர்கள் உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்ற நீதவான்களான மார்க்பெர்னாண்டோ, சோமவன்ச விஜேதுங்க, ஆனந்தகுமாரசாமி ஆகியோர் அடுத்த மாதம் 30ஆம் திகதிக்கு விசாரிக்க அனுமதி வழங்கியுள்ளனர்.

10/96 ஆம் இலக்க 96 – 5 - 9 திகதிய இன்னொரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டும் இரண்டாம் பிரதிவாதியான கல்வி அமைச்சு செயலாளர் அதிபர் சேவைக்கு பிரமாணக் குறிப்பின்படி உள்வாங்கப்பட்டு இருக்கும் அதிபர்களைத் தவிர ஏனையவர்களுக்கு சம்பள உயர்வு வழங்க வேண்டாம் என வாய்மூல ஆலோசனை வழங்கியுள்ளார் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஏழாலை கிழக்கில் மிதிவெடி

மேயக்கட்டிய மாட்டை பிடித்துச் சென்றபோது மாடு மிதிவெடியில்சிக்கியதால் பிடித்துச் சென்றவர் படுகாயமடைந்தார்.

மிதிவெடியை மிதித்த மாடு வலது முன்னங்காலை இழந்தது.

ஏழாலை கிழக்கில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம் பெற்றது.

அவ்விடத்தைச் சேர்ந்த வேலுசிங்கம் ஜெயச்சந்திரன் (வயது 18) என்ற இளைஞனே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (இ-15)

## மந்திகை ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வசதி இல்லை

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அம்புலன்ஸ் இல்லாததால் அவசர நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவசர நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமானால், அவர்களது உறவினர்கள் தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்த வேண்டி உள்ளது.

எரிபொருள் பற்றாக்குறையினால் தனியார் வாகனங்களின் [illegible] அதிகரித்துள்ளன. (இ-173

## சமய சந்நிதிகளில்

சரித்திரப்பிரசித்தி பெற்ற இணுவில் கந்தசாமி கோயில் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற உள்ளது. (அ-152)

★ ★ ★

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோவில் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். திங்களன்று தீர்த்தோற்சவம் இடம் பெறும். (அ-11)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலய தேர்த் திருவிழா நாளை 14ந் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும். (அ-100)

## 5 ஆவது உலக சைவ மாநாடு

கொழும்பு, ஜூலை 13

5ஆவது உலக சைவமாநாடு தென் ஆபிரிக்காவின் தேர்பன் நகரில் நடைபெறவிருக்கிறது.

செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடைபெற விருக்கும் இந்த மாநாட்டை தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா ஆரம்பித்து வைப்பார். (இ-3)

## தொலைபேசி சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். பிரதம தபாலகத்தில் இருந்து வெளியூருக்கு தொலைத்தொடர்பு கொள்வதற்காக தினமும் மக்கள் முண்டியடிக்கின்றனர். ஆனால் நாள் ஒன்றுக்கு ஐந்து பேருக்கு மட்டுமே தொலைபேசி வசதி கிடைக்கின்றது.

யாழ். பிரதம தபாலகத்தில் இருந்து மன்னார் தொலைத்தொடர்பு நிலையத்தின் ஊடாகவே தொலைத்தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

இரண்டு தொலைத் தொடர்பு இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதும் தற்போது அதில் ஓர் இணைப்பு மட்டுமே செயற் படுகின்றது.

## வாழ்க்கை செலவு சுட்டெண்

கொழுப்பு, ஜூலை. 13

தொகை மதிப்பு புள்ளி விபரத்திணைக்களத்தின் அறிக்கைப்படி 1996 ஜூன் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 1979 . 8 என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகசேவை, சிறுவர் நன்னடத்தை

# நேர்முகப் பரீட்சை மீண்டும் நடத்த முடிவு

சமூக சேவை உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் பதவிகளுக்காக 1995 இல் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தோரில் ஏற்கனவே நேர்முகத்தேர்வுக்கு தோற்றியோர் தவிர்ந்த ஏனைய பரீட்சார்த்திகளுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறவிருக்கிறது.

திருகோணமலை உள்துறை வீதியில் அமைந்துள்ள வடக்கு — கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சில் இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

கிழக்கு மாகாண பரீட்சார்த்திகளுக்கு இந்த மாதம் 15 ஆம், 16 ஆம் திகதிகளிலும்—

வடக்கு மாகாண பரீட்சார்த்திகளுக்கு 29 ஆம், 30 ஆம் திகதிகளிலும் — இந்தப் பரீட்சைகள் நடைபெறும்.

அழைப்புக் கடிதங்கள் கிடைக்காது விட்டாலும் பரீட்சார்த்திகள் இந்த நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியும். (இ-3)

# தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள நியூசிலாந்து அமைச்சர்கள் மறுப்பு

## இலங்கையின் நிர்ப்பந்தம் காரணம்

நியூசிலாந்து, ஜூலை 13

நியூசிலாந்தில் நடைபெற உள்ள தமிழ் மாநாட்டில் நியூசிலாந்து அமைச்சர்கள் எவரும் கலந்து கொள்ள மாட்டார்கள்.

நியூசிலாந்தின் குடியகல்வு குடி வரவு அமைச்சரும், உள்நாட்டு அமைச்சரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இருந்தனர்.

எனினும் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம் என்று நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சு பிரஸ்தாப இரு அமைச்சர்களுக்கும் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையில் கெரில்லாப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராளிக் குழு குறித்து நியூசிலாந்தில் கருத்து வேற்றுமைகள் நிலவுவதால், நியூசிலாந்து அமைச்சர்கள் தமிழ் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளதாம்.

இந்த மாநாட்டுக்கு எதிராக ஐக்கிய இலங்கையர் சங்கம் என்ற சிங்களவர்களைக் கொண்ட அமைப்பு பிரசாரங்களைச் செய்து வந்தது.

எனினும் தமிழ் மக்கள் பற்றிய தவறான கருத்தைப் போக்கவும் தமிழ் கலாசாரத்தை எடுத்துக் காட்டவுமே இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டது எனவும்—

இலங்கை அரசின் தூதரகத்தின் அழுத்தங்களுக்கு நியூசிலாந்து அரசு அடிபணிந்து விட்டது என்றும் இந்த மாநாட்டின் அமைப்பாளர் இராமநாதன் குற்றஞ் சாட்டியுள்ளார். (இ-10)

## 11 படையினருக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தாக்கி சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவத்தைச் சேர்ந்த 11 படை வீரர்களையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-10)

## குடா நாட்டுக்கு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில் தெரிவித்தார்.

பிரஸ்தாப சமாதானப் படைக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகும்.

ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் இரு இளைஞர்கள் தெரிவு செய்யப்படுவர் — என்றும் பிரதி அமைச்சர் சொன்னார்.

வடபகுதி சமாதான வேலைகளில் பங்கு எடுத்துக் கொள்ள தமக்குச் சந்தர்ப்பம் அளிக்குமாறு பல்வேறு இளைஞர் கழகங்கள் விடுத்த கோரிக்கையையடுத்து இத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் சொன்னார்.

தெரிவுசெய்யப்படும் சகல இளைஞர்களுக்கும் இராணுவப் பயிற்சி வழங்கப்படும். சாதாரண இராணுவத்தினருக்கு அளிக்கப்படும் சலுகைகளுடன் இவர்களுக்கு சம்பளமும் வழங்கப்படும்.

எனினும் மூன்று வருடங்களின் பின்னர் இவர்கள் சேவையில் இருந்து விலகிக் கொள்ள முடியும். சமுர்த்தித் திட்டத்தின் கீழ் இவர்கள் திரட்டப்படுவர். இவர்கள் தொண்டர் படையாகவே செயற்படுவர்.

சிவில் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடவுள்ள இவர்களுக்கு தற்பாதுகாப்புக்காகவே ஆயுதப் பயிற்சி வழங்கப்பட இருப்பதாகவும் —

இவர்கள் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் — என்றும் பிரதி அமைச்சர் ரத்வத்த செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

ஆனால் —

தொய்வடைந்துள்ள இராணுவத்துக்கு ஆட்களைச் சேர்க்கும் பணியைத் தூக்கி நிறுத்தும் முயற்சியே இது என்று கண்ணோட்டக்காரர்கள் கருதுகிறார்கள் என பி.பி.ஸி. தெரிவித்தது.

சமுர்த்தி வேலைத் திட்டத்திற்காக தொண்டர் படை என்ற பெயரில் இராணுவத்துக்கே இளைஞர்கள் சேர்க்கப்பட உள்ளார்கள் — என்று [illegible] தெரிவித்தது. (அ-3-10)

# லக்பிமவுக்கு எதிரான வழக்கில் ரூ. 5 கோடி

## அமைச்சருக்குக் கிடைக்கும்

கொழும்பு, ஜூலை 13

''லக்பிம'' பத்திரிகையைப் பிரசுரிக்கும் சுமதி பிரசுர நிறுவனத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மான நஷ்ட வழக்கில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வி. குணரத்தினாவுக்கு 5 கோடி ரூபா நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி ஏ. எல். எம் மஜித் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

நீதிபதி பணித்த கால எல்லைக்குள் ஆட்சேப வழக்கை தாக்கல் செய்ய பிரதிவாதி தரப்பு தவறியதன் காரணமாக இந்த வழக்கு ஒருதலைப்பட்சமாக விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

1995 ஆம் ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதி ''லக்பிம'' பத்திரிகையில் வெளியான கேலிச் சித்திரமே இந்த மான நஷ்ட வழக்குக்கு காரணமாகும்.

இந்தக் கேலிச் சித்திரம் ஏலிஸ் கெட்டிக்கொட என்ற ஓவியரால் வரையப்பட்டது.

கேலிச் சித்திரம் மிகவும் வெட்கக் கேடான முறையில் நடந்துகொண்ட குற்றவாளி என அமைச்சரைச் சித்திரித்திருந்தது என்றும்—

பின்னர் இந்தப் பத்திரிகை தனது தவறுக்கான திருத்தத்தை வெளியிட்ட போதிலும் பாதிக்கப்பட்ட வழக்காளியான அமைச்சருக்கு அது போதிய நிவாரணத்தை வழங்கவில்லை என்றும் மான நஷ்ட வழக்கில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-3)

## புலிகள் பின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் அரசு இல்லை என்பது திட்டவட்டமான விடயமாகும்.

யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்த படை நடவடிக்கையில் முக்கிய விடயத்தை அரசியல் ஆய்வாளர்கள் ஆராயத் தவறுகின்றனர்.

அதாவது புலிகள் தமது அனைத்து படை வளங்களுடனும் பின்வாங்கி விட்டார்கள் என்பதே அது.

ஒரு போரின் வெற்றியும் தோல்வியும் எதிரியின் படை வளங்கள் எந்தளவுக்கு அழிக்கப்படுகின்றன, தகர்க்கப்படுகின்றன என்பதைப் பொறுத்துத்தான் தீர்மானிக்கப்படும்.

எதிரி தனது படைத்துறை தளங்களை வைத்திருக்கும் வரை எதிரியை முற்றாக முறியடித்து விட்டதாகக் கூற முடியாது.

ஆகவே புலிகள் தமது படைத்துறை வளங்கள் அனைத்தையும் கையில் வைத்துக் கொண்டுதான் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறினார்கள் என்பது முக்கியம்.

ஆகவே பிரதேசத்தில் மாற்றம் ஏற்பட்டதே ஒழிய புலிகளின் படைத்துறை வளங்களில் பெரிய மாற்றம் ஏற்பட்டதாக இல்லை.

படைத்துறை வளங்களின் பெரிய மாற்றங்கள் ஏற்படாத நிலையில் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதும் —

கிழக்கில் தங்களின் பிடியை இறுக்கி வருவதும் — அதிசயிக்கத்தக்க விடயமல்ல.

கிழக்கில் புலிகளை முறியடிக்கும் நிலையில் இராணுவம் இல்லை. இராணுவத்துக்கு அதற்கான படைபலமோ ஆட்பலமோ இல்லை —

இப்படி அவர் கூறினார். (இ-3)

# மக்களை திசைதிருப்ப முயற்சி

கொழும்பு, ஜூலை 13

''யாழ்ப்பாணம் வழமைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது என்று அரசாங்கம் உலக நாடுகளுக்குக் காட்ட முயல்கின்றது. ஆயினும் அரசாங்கம் கூறும் மாற்றங்கள் அங்கு உடனடியாக ஏற்படவில்லை என்பதை மக்கள் அறிவர். பொது மக்களை திசை திருப்பிவிட அரசாங்கம் முயலக் கூடாது.''

ஐ. தே. க. கொழும்பு மாவட்ட எம். பியான எம். எச். முஹமது மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (இ-3)

# விவாகரத்து குறித்து அறிவிப்பு

லண்டன், ஜூலை 13

இளவரசர் சாள்ஸூம், இளவரசி டயானாவும் விவாகரத்துச் செய்ய ஒப்புதல் அளித்துவிட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இருவரும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி இளவரசி டயானா ஒரு கோடி 70 லட்சம் ஸ்ரேர்லிங் பவுணை இளவரசர் சார்ள்ஸிடமிருந்து பெறுவார். (இ-3)

# இராணுவ நடவடிக்கை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் பணிஞ்சங் கேணிப் பாலத்தை கடந்து சென்றுள்ளனர் என்றும்—

இந்த மோதலில் 9 புலிகள் கொல்லப்பட்டனர். என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்திருந்தது. (இ-3)

# மரண அறிவித்தல்கள்

## வைரவி இராசதுரை (போமன்)

(லொறி உரிமையாளர்)

கொல்லங்கலட்டி தெல்லிப்பளையைச் சேர்ந்தவரும் தற்பொழுது சங்கரத்தை துணைவியில் வசித்தவரும் லொறி உரிமையாளருமான வைரவி இராசதுரை (போமன்) நேற்று அகால மரணமானார்.

அன்னார் விஜயலஷ்மியின் கணவரும், பிரமினா, நிஸங்கன், பவா ஆகியோரின் தந்தையும், செல்லத்துரை, திருமதி தங்கரத்தினம், கந்தசாமி (கணக்கர்), குணரட்ணம், திருமதி இராஜேஸ்வரி, திருமதி. கனகேஸ்வரி, செல்வரெத்தினம் ஆகியோரின் சகோதரருமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு சங்கரத்தையில் நடைபெறும்.

சங்கரத்தை,
துணைவி.

தகவல்:
குடும்பத்தவர்
(41767)

## வல்லிபுரம் இராசரெத்தினம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட காணி L. D. O ஓவசியர் வல்லிபுரம் இராசரெத்தினம் 4 - 07 - 96 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற வல்லிபுரம் — இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், மணியின் அன்புக் கணவரும், உதயகுமார் (சுவீஸ்), பத்மசூரியன் (சுவிஸ்), லோகசூரியன் (சுவிஸ்), சுகர்ணா, கமலசூரியன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராணி, செப்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும், கம்புஸ்த்தா, சுரோந்தன் ஆகியோரின் பேரனும், பாலேஸ்வரி, ஞானேஸ்வரி, புவனேஸ்வரி, சந்தானலட்சுமி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கந்தையா — பர்வதம் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 7 - 7 - 96 அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராசரெத்தினம் மணி
(மனைவி)

கெனடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(41762)

## திருமதி புஸ்பராணி நவரட்ணராசா

கொக்குவில் மேற்கு கல்திட்டியைச் சேர்ந்த புஸ்பராணி நவரட்ணராசா 12-07-1996 இல் காலமாகிவிட்டார்.

இவர் நவரட்ணராசாவின் (வயறிங் நவம்) அன்பு மனைவியும், சாருஜன், சிந்துஜன், நிரோஜன், நிஷாளினி, நிலானி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கந்தையா — சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகளும், மார்க்கண்டு- இராசம்மா ஆகியோரின் மருமகளும், இராசன், சாந்தினி (ஜேர்மன்), இராஜன்பாபு, (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகராசா (பிரான்ஸ்), சிறிகாந்தராசா (நோர்வே), தர்மராசா, விமலாதேவி, இராஜேஸ்வரி, தவமணிதேவி, கலாதேவி, மோகனா, ஜீவராணி (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனியும், புஸ்பராசா, வெள்ளை, சாந்தன் (ஜேர்மன்), ஜெந்தி, உஷா, சுதா, பிறேமா ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், துஷல்யன், துஷானி, அபிஷாந் ஆகியோரின் அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-7-96) 12-30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
இராசன்
(சகோதரன்)

கல்திட்டி,
கொக்குவில் மேற்கு.

(4 1766)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/[illegible] கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 13-07-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org